# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2047/49 – 2017 නොවැම්බර් 30 වැනි බ්‍රහස්පතින්දා – 2017.11.30
***2047/49 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

*கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், வெள்ளவத்தை (வெள்ளவத்தை தெற்கு பிரிவு இல. 40, கொழும்பு மாநகர சபை எல்லைக்குள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை நாயகத்தினால் 2017.03.30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வரைபட இல. சீஓ/ரீஎச்ஜ/2016/349 இல் குறிப்பிடப்பட்ட 1.2858 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் எல்லைகள் :

**01. துண்டு இல. 1 - விஸ்தீரணம் : 1.2858 ஹெக்டயார்**

வடக்கு: ஹமாஸ் வீதி மற்றும் காலி வீதி ; கிழக்கு: காலி வீதி, காலி வீதியில் வரிமதிப்பீட்டு இல. 176, நெல்சன் பிளேசில் வரிமதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமையாளர் அறியப்பட முடியாத காணி, நெல்சன் பிளேசில் வரிமதிப்பீட்டு இல. 14, 16, 16ஏ, 22/1, 24/1, 26 மற்றும் 26 ஐக் கொண்ட காணி ; தெற்கு: காலி வீதியில் வரிமதிப்பீட்டு இல. 176, நெல்சன் பிளேசில் வரிமதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமை யாளர் அறியப்பட முடியாத காணி, நெல்சன் பிளேசில் வரிமதிப்பீட்டு இல. 14, 16, 16ஏ, 22/1, 24/1, 26 மற்றும் 28 ஐக் கொண்ட காணி ; மேற்கு: நெல்சன் பிளேசில் வரிமதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமையாளர் அறியப்பட முடியாத காணி, ஹமாஸ் வீதியில் வரிமதிப்பீட்டு இலக்கம் அறியப்பட முடியாத எஸ். வர்ணசூரிய உரிமை கோரும் காணி.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல.: 4-3/4/2015/எல்ஓ/327.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2017, ஒற்றோபர் 10.

12-516